## ஜனவரி - 30

**"சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்."**

**- லூக் 18:1**

தேவனிடத்தில் கிட்டிச் சேர நமக்கு எந்தவித பயமும் தேவையில்லை. பல முக்கியமான அலுவல்களில் அவர் ஈடுபட்டு அதில் அவர் தம் கவனத்தை செலுத்திக் கொண்டிருப்பாரே என கருத வேண்டாம் அல்லது சின்ன விஷயங்களுக்கு கூட நாம் அவரிடத்தில் அடிக்கடி சென்று அவருக்கு எரிச்சலை மூட்டுகிறோம் எனவும் கருத வேண்டாம். நாம் ஏறெடுக்கும் எந்த விண்ணப்பத்திற்கும் உத்திரவாதம் உண்டு என்பதனை வலியுறுத்திக் கூறவே இந்த நச்சரிக்கும் விதவையைப் பற்றிய உவமையை கூறினார். இந்த உவமையில் வரும் விதவை விடாது தொடர்ந்து அவரை தொந்தரவு செய்தும் அவள் நச்சரித்ததினால் அவளுக்கு பதில் அளிக்கப்பட்டது. இப்படிச் செய்வதினால் நாம் நம்முடைய தேவைக்காக காட்டும் உண்மையான ஆர்வமும் விசுவாசமும் வெளிப்படுகிறது. நமது வேண்டுதல் என்றைக்காவது கேட்கப்படும் என நம்புகிறோம். நம்முடைய விசுவாச குறைவினால் நாம் சோர்ந்து போகாமல் இருப்போமாகில் நாம் விரும்பியது கிடைக்கும். பதில் கிடைக்க தாமதித்ததின் பேரில் நம்முடைய ஆர்வம் அல்லது விசுவாசம் நின்று விட கூடாது. ஆர்வமும் விசுவாசமும் எல்லா காலங்களிலும் நமக்கு தேவையுண்டு. தேவனுடைய ஊழியத்தில் காலமும் வேளையும் ஒர் முக்கிய அங்கம் வகிக்கிறது. ஏற்ற வேளை வருகையில் நமது விண்ணப்பங்கள் நிறைவு பெருகின்றன.

**- Z ’95, 214 (R 1864).**

தேவனுடைய பிள்ளைக்கு அவரண்டை வருவதற்கு, ஜெபத்தின் மூலம் அவரை கிட்டிச் சேர ஒரு வாய்ப்பு கொடுத்திருப்பது எத்தனை பெரும் சிலாக்கியம் தெரியுமா! நமக்கு சகாயம் செய்ய பரிபூரண அன்பு கொண்ட தேவன் சிம்மாசனத்தில் வீற்றிருப்பது நமக்கு பெருத்த ஆசீர்வாதமாகும். இது நமக்கு உற்சாகத்தை கொடுக்க வேண்டும். நமக்கு ஒவ்வொரு தொல்லை வருகையிலும் நம்மை பரிபூரண அன்பு கொண்ட தேவனிடத்திலிருந்து பிரிக்க முடியாது என்கிற நம்பிக்கை வேண்டும். ஆகவே நாம் தேவனோடு இணைக்கப்பட்டிருப்போமாகில் நாம் வீழ்ந்து போகமாட்டோம். நம்முடைய ஒவ்வொரு தேவைக்கும் ஏற்ற பெலன் நமக்கு கிடைக்கும். நமது பெலன் அதற்கு ஈடு கொடுக்கும். நமக்கு வெற்றிகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். இறுதியில் நமக்கு பரிபூரண வெற்றி கிடைக்கும் அது இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்கு கிடைக்கும்.

**-P ’30, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

லூக் 2:37; 11:5-13; 21:36; மத் 15:27,28; 21:22; யோவா 15:7; 16:23; ரோம 12:12; ஏசா 62:6,7; சங் 118:5; 2கொரி 12:8,9; 1தெச 5:17; எபி 4:16; 1யோவா 5:14; 3:22; யாக் 1:5,6; எரே 29:13.

**கோபுர வாசிப்பு :** Z 13, 277 (R 5310).

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்தவாரத்தில் எனது அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது என்ன? அவற்றின் பலாபலன் என்ன?